International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சுப்ரபாரதிமணியனின் படைப்புகளில் சமுதாயச் சிக்கல்கள்

**வெ. சுமதி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ம. லோகநாதன்**
உதவிப் பேராசிரியர் & நெறியாளர்
தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருட்டினகிரி – 635 001

### முன்னுரை

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையது. மனித வாழ்க்கை இயற்கைச் சூழலுக்கும், தாம் வாழுகின்ற சமுதாயத்திற்கும் ஏற்ப உரிய மாற்றங்களைப் பெற்று வளரக் கூடியது. மாறுதல் என்பது மானுட சமூகத்தின் இயற்கையாகும். முன்னரே கூறியபடி இலக்கியம் மனித வாழ்க்கையிலிருந்து தோன்றுகின்ற காரணத்தால் அவ்வக்கால வாழ்க்கை நிலை, மாற்றம், மக்களின் மனநிலை போன்றவற்றைப் பதிவு செய்து வெளியிடும் தன்மை உடையதாகும். வாழ்க்கை எவ்வாறு மாற்றத்திற்குரியதோ அவ்வாறே இலக்கிய வகைகளும், இலக்கியம் எடுத்துரைக்கும் கருத்துக்களும் காலத்திற்கேற்ப மாற்றம் பெறுகின்றன. அவ்வகையில் இக்கால இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று புதினம் ஆகும். தனிமனிதர்கள், குடும்பம், சமூகம் போன்ற மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் வெளிப்படுத்துவதற்குப் புதினம் தக்க இலக்கிய வகையாகும். ஏனெனில் நீண்ட நெடிய வாழ்க்கைத் தளங்களைப் பரந்துபட்ட மனிதர்களோடு பின்னிப்பிணைந்து வெளிப்படுத்துவதற்கு மற்ற இலக்கிய வகைகளை விடப் புதினம் பொருத்தமானதாகிறது எனக் கூறலாம். இதனைக் கருத்தில் கொண்டு சுப்ரபாரதிமணியனின் புதினப் படைப்புக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

### தொழிலாளர் சிக்கல்கள்

அன்றாடச் சமுதாய இயக்கத்தில் படைப்பாளர்களுக்குச் சுய மதிப்பீடு உண்டு. கல்வி, தொழில், வேலைவாய்ப்பு என்ற ஒவ்வொரு தளத்தின் மீதும் தொலை நோக்குப் பார்வை அவர்களுக்கு இருப்பது உண்மையே. சில படைப்பாளர்கள் தாங்கள் பார்த்த, அல்லது சந்தித்த தொழில் சார்ந்த நசுக்கல்களைப் படைப்பின் வழியே வெளிப்படுத்துகின்றனர். அவற்றில் தன்னுணர்வுடன் சமுதாய அக்கறையும் காணக்கூடும். அத்தகைய தாக்கத்தைத்தான் படைப்பாளர் சுப்ரபாரதி மணியன் புதினங்களில் காணமுடிகிறது. நவீனத் தொழில் நிறைந்த நகரத்தில் அன்றாடத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளையும், ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் எதிர்கொள்கிற சீரழிவுகளையும் தமது புதினங்களில் சித்திரித்துள்ளார். முதலாளி வர்க்கத்திடம் எண்ணற்ற ஆண், பெண் தொழிலாளர்கள் நாள்தோறும் எதிர்கொள்ளும் சிக்கல்களையும், மனவுணர்வுகளையும், குழந்தைத் தொழிலாளர்களின் அவலச் சூழலையும், அவர்கள் நாள்தோறும் சந்திக்கின்ற சிக்கல்கள் குறித்தும் சுப்ரபாரதிமணியன் புதினங்களில் காணப்படும் நிலைகளை இவ்வியல் ஆய்கிறது.

### உழைப்பின் முக்கியத்துவம்

ஒரு சமுதாயத்தில் தனி மனிதனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அவரது பொருளாதார நிலையைக் கொண்டுதான் நிர்ணயம் செய்யப்படுகிறது. இத்தகைய பொருளாதார முன்னேற்றத்திற்கு உழைப்பு அச்சாணியாக அமைகிறது. நம் பண்டைய முன்னோர்கள் உழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் மரபுசார்ந்த வேளாண் முறைகளைக் கடைப் பிடித்து

வந்தனரே தவிர அன்று தொழில் நுட்பங்களின் வளர்ச்சி இல்லை, கற்கால மனிதர்கள் வேட்டையாடும் தொழிலை அடுத்து அறிவு பூர்வமாக மேற்கொண்ட தொழில் வேளாண்மையாகும். அவர்கள் தங்களின் சமுதாயத் தேவையை உணர்ந்து கடுமையாக உழைத்தனர். அத்தகைய உழைப்பின் பெருமையை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றவரெல்லாம்**

**தொழுதுண்டு பின் செல்வர்"[1]**

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். மனித ஆதாரத்தோடு நேரடியாகத் தொடர்புடையது உழவுத் தொழில், நம் முன்னோர்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு முயன்று உழைக்கத் தொடங்கினர். இறைவனின் அருள் இல்லாவிட்டாலும் உழைப்பே உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை உணர்ந்தனர்.

**"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**

**மெய்வருத்தக் கூலி தரும்"[2]**

என்ற வள்ளுவரின் வாக்கும் அதை மெய்ப்பிக்கிறது.

சங்ககால மக்கள் வாழ்வில் தொடரப்பட்ட உழைப்பு இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டுள்ளது. இத்தகைய உழைப்புத் தவிர்க்கப் படும் போது அச்சமுதாயம் பொருளாதாரச் சிக்கலுக்கு ஆட்படும். நாட்டின் வளர்ச்சியில் ஒவ்வொருவரின் உழைப்பும் அடங்கியிருக்க வேண்டும் என்ற சிந்தனையை பட்டுக்கோட்டை யார் சொல்லுமிடத்து:

**"உழைத்தால்தான் பற்றாக்குறையை**

**ஒழிக்க முடியும் - மக்கள்**

**ஓய்ந்திருந்தால் நாட்டின் நிலைமை**

**மோசமாக முடியும்"[3]**

என்கிறார். ஆகவே, ஒவ்வொரு மனிதனும் நாட்டின் வளர்ச்சிக்குத் தங்களின் பங்கு என்ன என்பதை உணர வேண்டும். இங்கு உழைப்பாளரின் பங்களிப்பைப் போன்று நகர்ப் புறங்களில் நவீனத் தொழில் பெருக்கத்தால் தொழிலாளர்களின் பெருக்கமும் அதிகரித்து வருகிறது. தொழில் வளர்ச்சியைப் பொருத்த வரையில் உழைப்பாளரும் தொழிலாளரும் ஒரே மாதிரியான சமுதாய மதிப்பீட்டைப் பெறுகின்றனர்.

### பாத்திரங்களும் எதிர்நோக்கும் சமூக சிக்கல்களும்

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் முதலாளி வர்க்கத்தால் நசுக்கப்படுகின்றனர். ஆண் தொழிலாளர்களாயிருப்பின் அதிக வேலைப் பளு தந்து நசுக்குகின்றனர். பெண் தொழிலாளர்க ளாயிருந்தால் பாலியல் தொல்லைகளைச் செய்வதுடன் ஊதியச் சுரண்டலையும் செய்கின்றனர். குழந்தைத் தொழிலாளர்களாயி ருப்பின் குறைந்த சம்பளம் தந்து அதிக வேலைச் சுமையை ஏற்படுத்துகின்றனர். இத்தகைய சிக்கல்களைப் படைப்பாளர் சுப்ரபாரதிமணியன் தமது படைப்புக்களில் பதிவு செய்துள்ளார். இவற்றில் தொழிலாளர்களின் அவலங்கள்தான் எதிரொலிக்கின்றன.

தேநீர் இடைவேளை புதினத்தில் வரும் மல்லிகா, ஷமீம், கண்ணம்மா முதலிய பெண் பாத்திரங்கள் தொழில் நிலையில் எதிர்கொள்ளும் சிக்கல் களைப் படைப்பாளர் ஒரு பெண்ணின் நிலையில் நின்று வெளிப்படுத்தியுள்ளார். இப் புதினத்தில் வரும் ரங்கநாதனின் கடிதங்களில் வெளிப்படும் கிரிஜா. அருக்காணி இருவரும் எதிர்கொள்ளும் சிக்கல்கள் முழுமையாக பிரதிபலிக்கின்றன.

சாயத்திரை என்ற புதினம் திருப்பூர் நகரின் சீரழிவுக்குக் காரணமான சாயப்பட்டறைக் கழிவுகளை மையமிட்டது. இதில் சாயப்பட்டறை வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஆபத்தான நிலை அவலக் குரல்களாக ஒலிக்கின்றன. மற்றும் சிலர் புதினத்தில் மல்லிகார்சுனன் தனது மகனைச் சிறு வயதிலேயே வேலைக்கு அமர்த்தும் கட்டாயத்திற்குத் தள்ளப்படும் அவலத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இதே நிலை எல்லோருடைய வாழ்க்கையில் நேரும்போது அச்சமுதாயம் எத்தகைய சீர்குலைவை அடையும் என்ற அச்சத்தை இப்புதினம் முன் வைக்கிறது.

### முதலாளி வர்க்கம்

தொழிலாளர்களின் நலனில் சிறிதளவும் அக்கறை இல்லாமல் தனி நபர் உணர்வை நாடுபவர்கள் முதலாளிகள். இவர்கள் தங்களின் சுரண்டல் கொள்கைக்காக எந்த வகையான வழிமுறை களைப் பின்பற்ற நேர்ந்தாலும் அதனைச் செய்தே தீருவர். தேநீர் இடைவேளை புதினத்தில் வரும் ரங்கநாதன் பாத்திரம் பெரியசாமிக்கு எழுதிய கடிதத்தில் முதலாளி வர்க்கத்தின் அராஜகத்தைக் காட்டுகிறார். இன்றும் இந்நிலையை எண்ணிப் பார்க்க வேதனையாக இருப்பதைக் காட்டி உள்ளார். அரசு சம்பளநிர்ணயம் செய்தாலும் முதலாளி வர்க்கம் நூற்பாலைகளில் அதை நடைமுறைப்படுத்துவதில்லை. இருப்பினும் வாழ வேண்டும் என்ற ஒரே கட்டாயத்தால் அத்தயை சம்பளத்திற்காக உழைக்க நேர்கிறது என்கிறார்.

### பெண் தொழிலாளர் சிக்கல்

ஆய்வு செய்யப்பட்ட புதினங்களில் பெண் தொழிலாளர்கள் அதிக அளவில் படைக்கப் பட்டுள்ளனர். ஒவ்வொரு பெண் மாந்தரின் வழி ஒவ்வொரு சிக்கலை ஆசிரியர் முன்வைக்கிறார். இவர்கள் மீது பெரும்பான்மையாகப் பாலியல்

கொடுமைகள் மேலோங்கியிருப்பது வெளிப் படுகிறது. ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணுக் குப் பாதுகாப்பில்லை என்பது மையக் கருத்தாக இருக்கிறது. கீழ்வரும் பெண் மாந்தர்கள் தொழில் நிலைகளில் சிக்கலைச் சந்திக்கின்றனர்.

## குழந்தைத் தொழிலாளர்

குழந்தைகள் மனித இனத்தின் விலை மதிக்க முடியாத செல்வங்கள் ஆவர். இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் 'மகிழ்ச்சியான குழந்தை தேசத்தின் பெருமை என்ற சர்வதேசக் குழந்தை கள் ஆண்டு வாசகம் அமைந்தது. குழந்தைகள் நாட்டின் செல்வங்களாகப் போற்றப்படும் போது தான் நாளைய சமூக வளர்ச்சி முழுமை பெறும். ஆனால் நடைமுறையில் நம் சமூகத்தில் பெரும் பாலான குழந்தைகள் நலிந்த பிரிவினருள் ஒரு பகுதியினராக விளங்குகின்றனர். பெரும்பாலான குழந்தைகள் தம் வீடுகளிலேயே பயிலும் பள்ளிகளிலேயே தம் இயல்புகளுக்கு முற்றிலும் அந்நியமான சூழலில் வளர்ந்திட வாழ்ந்திடக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். குழந்தைகள் தம் குழந்தைப்பருவத்தின் அனைத்து மகிழ்வினையும் இழக்கின்றனர். சுயஅடையாளம் மறுக்கப் பட்டமையால் மாண்பிழந்து போயிருக்கும் நிலையிலேயே பெரும்பான்மைக் குழந்தைச் சமூகம் விளங்குகிறது.

“மொட்டிலேயே பூ கருகுவது போல, நமது நாட்டில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு அவர்களின் வளர்ச்சியை உறிஞ்சும் நிலை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. 1979இல் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு இந்திய அரசு இயற்றிய மகிழ்ச்சியான குழந்தை, தேசத்தின் பெருமை' என்ற வாசகம் இன்றும் நமது நினைவில் இருந்து அகலவில்லை. ஆனால். குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும், சுரண்டலும் அதிகரித்துக் கொண்டுதான் உள்ளன. பலர் சிறு வயதிலேயே வேலை செய்ய நிர்பந்திக்கப்படும்போது. தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளிக்காட்டத் திறன் இல்லாதவர்களாய் இருக்கின்றனர்."[4]

## பெண்ணியச் சிக்கல்கள்

அன்றாடக் குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் பெண் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆண் தன்னை மதிக்காத இடங்களில் பெண்ணியம் எழுகிறது. பெண் தனக்கான சுதந்திரத்திற்காகப் போராடும் போது அது வரலாறாகவும், இலக்கியமாகவும் பதிவாகிறது. தொழில் நிலையில் ஈடுபட்டுள்ள பெண்களின் சிக்கல்கள் குறித்த படைப்புக்கள் சமீபகாலமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. திருப்பூர் வட்டார ஆடை நிறுவனங்களில் பணி புரியும் பெண்களின் உடல் சார்ந்த சிக்கல்கள், உணர்வு சார்ந்த சிக்கல்கள், பாலியல் வன்கொடுமைகள், நாள்தோறும் சந்திக்கும் சிக்கல்கள் ஆகியன ஆய்வுப் புதினங்களில் வெளிப்படும் நிலை குறித்து இவ்வியல் ஆராய்கின்றது.

## முடிவுரை

தொழில் கூடங்களிலும் நிறுவனங்களிலும் இருக் கின்ற அதிகார நிலை. தொழிலாளர்கள் மீதான கொடுமைகளுக்குக் காரணமாக உள்ளது. மேலும் ஏழை எளியோரைப் பணியமர்த்தி அவர்களின் வறுமையைக் காரணங்காட்டி தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் போக்கும் புதினங்களில் வெளிப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை கள் பல்வாறு இருப்பினும் ஆண் தொழிலாளர் களைவிடப் பெண் தொழிலாளர்களுக்குப் பாலியல் என்னும் வன்கொடுமை, மிகுந்த சிக்கலாகிறது. இந்தக் கொடுமை பெண் குழந்தைத் தொழிலாளர்களை அதிக அளவில் பாதிப்பதைப் புதினங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்தையும், அதனால் ஏற்படும் இறப்பையும் பற்றிக் கவலைப் படுவதில்லை. மேலும் அவர்களுக்கு எத்தகைய இழப்பீடுகளும் வழங்கப்படுவதில்லை. இதனால் தொழிலாளர்கள் உத்திரவாதமற்ற வாழ்க்கையே வாழவேண்டியுள்ளது என்ற கருத்துப் புலப் படுகிறது.

## அடிக் குறிப்புக்கள்

1. திருவள்ளுவர், திருக்குறள். எண்.1033
2. மேலது. எண். 619
3. பாலகிருஷ்ணன். பி.கு.. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், ப.55
4. பால்பாஸ்கர்.ஜே.. மாத்யூ பிரான்சிஸ்.. குழந்தைத் தொழிலாளர்கள், ப.1

## துணைநூற் பட்டியல்

1. சுப்ரபாரதிமணியன் நீர்த்துளி, உயிர்மை பதிப்பகம், சென்னை, 4.ப., 2011.
2. சுப்ரபாரதிமணியன் பிணங்களின் முகங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 4.ப., 2014
3. சுப்ரபாரதிமணியன் மாலு, உயிர்மை பதிப்பகம், சென்னை, 4.ப., 2012.
4. சுப்ரபாரதிமணியன் ஓடும் நதி, அம்ருதா, சென்னை, 4.ப., 2007
5. சுப்ரபாரதிமணியன் சப்பரம், காவ்யா, சென்னை, 4.ப., 2013
6. சுப்ரபாரதிமணியன் சமையலறைக் கலயங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 4.ப., 2014.